2018 ஜூன் 28]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்கி, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன்.*

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் அருள்மிகு சந்திரமௌளீஸ்வரர் திருக்கோயிலைப் புனரமைப்புச் செய்து திருப்பணிகளை நடத்திட, Regional Screening Committee *மற்றும் மாண்புமிகு உயர் நீதிமன்றக் குழுவின் ஒப்புதலைப் பெற்று, மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 240, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. *கலைச்செல்வன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

240—

உள்விளையாட்டு அரங்கம்

***21008—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் நவீன உள்விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2018 ஜூன் 28

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மாவின் கனவை நனவாக்கிட வெகுச்சிறப்பாக ஆட்சி செய்துகொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதியைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவரது தொகுதிக்குட்பட்ட விருத்தாசலத்தில் நவீன உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்கள். ஏற்கெனவே அவருடைய மாவட்டமான கடலூரில், மாவட்ட விளையாட்டு மைதானம் அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. விருத்தாசலம் தொகுதியில் ஒரு சிறு விளையாட்டு அரங்கம் 400 மீட்டர் athletics track, foot ball ground, volley ball ground, kabaddi, kho kho, hand ball, throw ball *ஆகிய அனைத்து விளையாட்டுகளுக்கான வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, கடலூர் மாவட்டம், விருத்தாசலத்தில் நவீன உள்விளையாட்டு அரங்கம் அமைக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறை என்பது விளையாட்டான துறை அல்ல; அது ஓர் உயிரோட்டமான, உன்னதத் துறை என்பதை உலகிற்கு எடுத்துக்காட்டும் வகையில், நேரு விளையாட்டு அரங்கை அமைத்து, விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு, முதல்வராக மட்டுமல்லாமல், தன்னிகரற்ற தாயாகவும் இருந்து, காத்திட்ட மாண்புமிகு அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் நகராட்சியில் 5¾ ஏக்கரில் mini stadium *இயங்கி வருகிறது. இப்பகுதி வளர்ந்து வருகின்ற பகுதி; மாவட்டத்தில் உள்ள மையப் பகுதி. எதிர்காலத்தில் விருத்தாசலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் மாவட்டம் அமைய வாய்ப்பு*

2018 ஜுன் 28]

இருக்கின்ற பகுதி. மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட 'விளையாட்டு வீரர்களை வேட்டையாடித் தேர்ந்தெடுத்தல்' திட்டத்தின்கீழ், கால்பந்து விளையாட்டில் தமிழக அளவில் விருத்தாசலம் மையம்தான் முதன்மையாக விளங்குகிறது. எதிர்காலத்தில் பல்நோக்கு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளின் நலன் கருதி, புதிய அரசு பல்நோக்கு விளையாட்டு அரங்கம் அமைக்கத் தேவையான அனைத்து வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் இம்மையம் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலனை செய்து, இதனை விரிவுபடுத்தி, அங்கு புதிய பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் தற்போது செயல்பட்டுவரும் சிறு விளையாட்டு அரங்கத்தில் உள்விளையாட்டு அரங்கம் கட்டும் அளவிற்குப் போதுமான இடவசதி இல்லை என்று அந்தப் பகுதியில் இருக்கின்ற அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனவே, உள்விளையாட்டு அரங்கம் தேவைப்படும்பட்சத்தில், அதற்குரிய இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் தேர்வு செய்து வழங்கினால், அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். விருத்தாசலம் நகராட்சியில் இதுவரை இயங்கி வருகின்ற மினி ஸ்டேடியத்தை விரிவுபடுத்தி, கால்பந்து மைதானத்தை புல் தரைகள் கொண்ட மைதானமாகவும், தடகள ஓடு பாதையை நவீன முறையில் தரம் உயர்த்தியும் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். சுமார் 100 விளையாட்டு வீரர்கள்*

மற்றும் வீராங்கனைகள் தங்கி, பயிற்சி பெறுவதற்கு ஏதுவாக புதிய கட்டடம் கட்டுவதற்கான இடம் அங்கு இருப்பதால், அதைக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், விளையாட்டு வீரர்கள் அதிகம் உள்ள மாவட்டம். முத்தமிழ் அறிஞர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டு, அவர்களாலேயே திறக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சுமார் 6 ஏக்கர் பரப்பில் அமையப்பெற்ற அந்த விளையாட்டு அரங்கம், இப்பொழுது முட்புதர்கள் நிறைந்து, சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தால் பாழாக்கப்பட்டு, பல சமூக விரோத செயல்கள் நடக்கக் காரணமாக இருக்கிறது. அதனால் அந்தப் பகுதியில் உள்ள அந்த விளையாட்டரங்கத்திற்கு சுற்றுச் சுவர் அமைத்து, மின் விளக்குகள் பொருத்தித் தருவதோடு, நடைபாதை அமைக்கவும், கிரிக்கெட் மற்றும்* foot ball *விளையாட்டு வீரர்கள் அதனைப் பயன்படுத்திடும் வகையில், அந்த விளையாட்டரங்கத்தை மேம்படுத்தித் தருமாறும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியிருந்தால் கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் பரிசீலனைக்குக் கொண்டு சென்று, அந்த இடம் விரிவாக்கம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]